# யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்

## பரிசில் நிகழ்வு நாள்
## 15-09-2017

# யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்

# பரிசில் நாள்-2017

**இடம் :- பாடசாலை பிரதான மண்டபம்**
**காலம் :- 15.09.2017 வெள்ளிக்கிழமை**
**நேரம் :- பி.ப.1.30 மணி**

தலைமை:
**திரு. நாகலிங்கம் கருணாகரன்**
(வித்தியாலய முதல்வர்)

பிரதம விருந்தினர்:
**உயர்திரு. சுப்பிரமணியம் சுந்தரசிவம்**
(வலயக்கல்விப்பணிப்பாளர் - வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி)

சிறப்பு விருந்தினர்கள்:
**கௌரவ. இரத்தினசிங்கம் ஜெயசேகரன்**
(வட மாகாணசபை உறுப்பினர்-வடக்கு மாகாணம்)

**உயர்திரு. வீரகத்தி கருணலிங்கம்**
(அதிபர் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

— அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் —
பாடசாலைச் சமூகத்தினர்.

# யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்

## பரிசில் நாள்-2016

## நிகழ்வு நாள்: 15.09.2017

<u>நிகழ்ச்சி நிரல்</u>

1. தேசியக்கொடி ஏற்றல்
2. பாடசாலைக்கொடி ஏற்றல்
3. மங்கள விளக்கேற்றல்
4. இறைவணக்கம்
5. வரவேற்பு நடனம்
6. வரவேற்புரை
7. ஆசியுரை
8. அதிபர் அறிக்கை
9. பரிசில் வழங்கல்–தரம் 1–5
10. சிறப்பு விருந்தினர் உரை
11. பரிசில் வழங்கல்–தரம் 6–9
12. சிறப்பு விருந்தினர் உரை
13. பரிசில் வழங்கல்–தரம் 10–11
14. பிரதம விருந்தினர் உரை
15. நன்றியுரை
16. கலை நிகழ்வுகள்

# பாடசாலைக் கீதம்

இராகம்:- **கரகரப்பிரியா** தாளம்:- **ஆதி**

சுந்தர நற்கலை ஒளி தரும் கைதடி
விக்கினேஸ்வர வித்தியாலயமே
சிந்தை மகிழ்வொடு என்றும் உயர்வுற
வந்தனை செய்து நாம் வாழ்த்துவோமே.
(சுந்தர)

ஆனைமுகன் திருக்கோயிலுக் கண்மையில்
அவனருள் விக்கினம் நீங்கிடவே
கானமதில் உயர் குழலிசை தவிலொலி
காற்றினில் வந்தின்பம் ஊட்டிடவே.
(சுந்தர)

செந்தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம்
நன்னெறியூட்டும் சமயமுடன் கலைகள்
வாழ்வாங்கு வாழ்ந்திட குடியியல், புவியியல், வரலாறு
தொழிநுட்ப அறிவும் திறனும் தரும்
(சுந்தர)

**இயற்றியவர்: திரு. அ. கி. ஏரம்பமூர்த்தி**

# அதிபர் அறிக்கை

இவ்வித்தியாலயத்தின் இன்றைய பரிசில் நாள் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய எமது தென்மராட்சிக் கல்வி வலயத்தின் கல்விப்பணிப்பாளர் உயர்திரு சுப்பிரமணியம் சுந்தரசிவம் அவர்களே, சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிக்கும் பெருமதிப்பிற்குரிய முன்னாள் யாழ் கைத்தொழில் வணிக மன்றத்தலைவரும் வடமாகாணசபை உறுப்பினருமான கௌரவ திரு இரத்தினசிங்கம் ஜெயசேகரன் அவர்களே, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் உயர்திரு வீரகத்தி கருணலிங்கம் அவர்களே,தென்மராட்சிக் கல்வி வலய கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, முதன்மை ஆசிரியர்களே, பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களே, பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே,அயற்பாடசாலை ஆசிரியர்களே பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, எமது பாடசாலையின் ஆசிரியர்களே அன்புசார் மாணவச் செல்வங்களே, கல்விசாரா ஊழியர்களே உங்கள் அனைவருக்கும் இந்நேர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரதம விருந்தினர் உயர்திரு சுப்பிரமணியம் சுந்தரசிவம் அவர்களே,எமது அழைப்பை ஏற்று பெருமனதுடன் வருகை தந்திருக்கும் தாங்கள் எமது வலயத்தின் நிர்வாகக் கட்டமைப்பின் மிக உயர்ந்த பதவியை அலங்கரித்துக் கொண்டிருக்கிறீர்கள்.பண்ணாகம் வடக்கின் (காலையடி,பண்டத்தரிப்பு) மைந்தனாகப் பிறந்து ஆரம்பக்கல்வியை யா/பண்ணாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியிலும் உயர்கல்வியை யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் கற்று 1981-1985 காலப்பகுதியில் யாழ் பல்கலைக்கழகத்தில் வர்த்தகமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டீர்கள்.1994இல் யாழ் பல்கலைக்கழகத்தில் முழுநேரக் கல்வி டிப்ளோமாவை மேற்கொண்டதோடு 2001ம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணி கற்கை நெறியை மேற் கொண்டீர்கள். 14.12.1987இல் ஆசிரியத்துறையில் காலடி எடுத்து வைத்த தாங்கள், ஹ/ஹம்பாந்தோட்டை சாஹிராக் கல்லூரியில் முதல் நியமனத்தைப் பெற்றுக் கொண்டதோடு தொடர்ந்து யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரக் கல்லூரியிலும் கடமையாற்றி அதன்பின் இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தி பெற்று 04.01.1999இல் வலிகாமம் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக(நிர்வாகம்) கடமையாற்றினீர்கள்.

தொடர்ந்து02.04.2012 முதல் 08.11.2015 வரை தென்மராட்சி கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளராகவும்(கல்வி அபிவிருத்தி) கடமையாற்றி பதவி உயர்வு

பெற்று 09.11.2015 முதல் 08.09.2017 வரை தீவக வலயக்கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளீர்கள். அதனைத் தொடர்ந்து 09.09.2017 அன்று முதல் தென்மராட்சி கல்விவலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராகக் கடமையேற்று சேவையாற்றும் தங்களை இச்சந்தர்ப்பத்தில் வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

சிறப்பு விருந்தினர் அவர்களே, கல்வி வளமும் கடல் வளமும் கொழிக்கும் வடமராட்சி மண்ணின் தொண்டமனாறு என்னும் ஊரில் பிறந்து வடமராட்சி மண்ணிற்கு புகழ் சேர்த்த தாங்கள் யா/தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளையார் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்று யா/உடுப்பிட்டி அமெரிக்கமிசன் தமிழ் ஆண்கள் பாடசாலையில் உயர் கல்வியைக் கற்று சிறந்து விளங்கிய தாங்கள்வியாபாரத்துறையில் ஆர்வங்கொண்டு வியாபார நிறுவனத்தை ஆரம்பித்து சிறந்த முயற்சியாளனாக விளங்கியதுடன் யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தின் தலைவராகவும் திறம்பட சேவையாற்றியுள்ளீர்கள். அத்துடன் தற்போது வடமாகாணசபை உறுப்பினராக சேவையாற்றும் தங்களையும் வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் உயர்திரு வீரகத்தி கருணலிங்கம் அவர்களே! வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட தாங்கள், யா/நயினாதீவு கனிஸ்டகணேசவித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியையும் யா/நயினாதீவு மகா வித்தியாலயத்தில் உயர்கல்வியையும் கற்று யாழ்பல்கலைக்கழகத்தில் கலைமாணிப்பட்டத்தையும், தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நெறியையும், யாழ் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும், தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளீர்கள். 1989இல் ஆசிரிய நியமனம் பெற்ற தாங்கள் பின் ஆசிரிய ஆலோசகராகவும் விளங்கியுள்ளீர்கள். 2011இல் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையில் இணைந்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகி 2013ஆம் ஆண்டு அக்கலாசாலைக்கு பிரதிஅதிபராகி 2014ஆம் ஆண்டிலிருந்து அதிபராக அளப்பரிய சேவையாற்றி வரும் தங்களையும்இச்சந்தர்ப்பத்தில் வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

இப்பரிசில் நாள் நிகழ்விற்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்களே, உதவிக்கல்விப் பணிப்பாளர்களே, கோட்டக்கல்விப்பணிப்பாளரே, ஆசிரியஆலோசகர்களே, கோட்டக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே, பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, ஆசிரியர்களே, அயற்பாடசாலை ஆசிரியர்களே, கல்வி சாரா ஊழியர்களே,

மாணவச் செல்வங்களே, பாடசாலையின் தேவையறிந்து உற்ற நேரத்தில் உதவி செய்கின்ற தங்கள் அனைவரையும் வருக வருகவென மகிழ்வுடன் வரவேற்கின்றேன்.

## எமது வித்தியாலய ஆசிரிய சமூகம்

எமது வித்தியாலயத்தில் அதிபர்,உப அதிபர்,ஆசிரியர்கள் உட்பட 22 பேர் கடமையாற்றுகின்றார்கள். கல்வி மறு சீரமைப்பின் மாற்றங்களுக்கு ஏற்ப நவீன யுகத்தின் சவால்களுக்கும் எதிர்கால சவால்களுக்கும் தம்மை தயார்படுத்தக் கூடியவர்களாக மாணவர் சமூகத்தினை உருவாக்கும் இலட்சிய நோக்குடன் எமது ஆசிரியர்கள் தமது அர்ப்பணிப்பான சேவையை வழங்கி வருகிறார்கள். இவ்வாசிரியர் குழாத்தினை நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

## ஆசிரிய ஆளணி விபரம்

| | |
|---|---|
| பட்டதாரிகள் | 06 |
| நுண்கலைப் பட்டதாரிகள் | 03 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | 08 |
| கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரர்கள் | 05 |
| **மொத்தம்** | **22** |

## அதிபர் இடமாற்றம்

இப்பாடசாலையில் 2013ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து அதிபராகக் கடமையாற்றிய திரு சுந்தரமூர்த்தி சிவானந்தன் அவர்கள் 19.02.2016 யிலிருந்து யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு பிரதி அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்றார். அதனைத் தொடர்ந்து திருமதி சிவலோஜினி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் பதில் அதிபராகக் கடமையாற்றினார். 09.06.2016 ஆந்திகதியிலிருந்து திரு நாகலிங்கம் கருணாகரன் ஆகிய நான் இப்பாடசாலைக்கு அதிபராகக் கடமையாற்றி வருகின்றேன்.

2016ம் ஆண்டு இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர்கள்:

1. திரு. செ.மதனரூபன்
2. திருமதி. ற.ஶ்ரீதரன்
3. திருமதி. சு.பிரகலாதன்
4. திருமதி. ந.தவராசா

2017ம் ஆண்டு இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர்கள்:

1. செல்வி. த.தம்பையா
2. திரு.இ.சத்தியேஸ்வரன்
3. திருமதி. சு.ஜெஜீவன்

2016ம் ஆண்டு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்:

1. திருமதி. அ.டானியல் றஞ்சித்
2. திருமதி. ஶ்ரீ.ஞானச்சந்திரன்
3. திரு. சோ.கோகுலன்

2017ம் ஆண்டுஇடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்:

1. திருமதி. க.திருச்செல்வராசா
2. திருமதி. செ.தனபாலசிங்கம்

ஆகியோரின் சேவையினை நினைவு கூர்வதோடு, அவர்களுக்கு எனது பாராட்டுக்களையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வருடம் 12-07-2017 அன்று எமது நடன பாட ஆசிரியை திருமதி நல்லினி சிவராம் அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய பாடசாலைச் சமூகம் அவரை வாழ்த்துகின்றது.

## கல்வி சாரா ஊழியர்கள்

எமது பாடசாலையில் கல்வி சாரா ஊழியர்கள் இருவர் கடமையாற்றுகின்றனர். திரு தி.சசிக்குமார், திரு அ.ஸ்ரனிஸ்லொஸ் ஆகியோர் பாடசாலையின் அகபுற செயற்பாடுகளில் தமது கடமையை அர்ப்பணிப்போடு செய்து வருகின்றமை பாராட்டுக்குரியது.

## பாடசாலை மாணவர் தொகையும் அவர்தம் திறமைவெளிப்பாடும்

| வகுப்பு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1-5 | 39 | 43 | 82 |
| 6-9 | 50 | 48 | 98 |
| 10-11 | 15 | 23 | 38 |
| **மொத்தம்** | **104** | **114** | **218** |

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை

| | **2014** | **2015** | **2016** |
|---|---|---|---|
| தோற்றியோர் | 24 | 25 | 22 |
| சித்தியடைந்தோர் | 04 | 01 | 01 |
| 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | 21 | 19 | 19 |
| 70 புள்ளிகளுக்கு மேல் சித்தி வீதம் | **83%** | **76%** | **86%** |

## க.பொ.த.சாதாரன தரப்பரீட்சைப் பெறுபேறுகள்

| | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|
| தோற்றியோர் | 27 | 26 | 18 |
| உயர்தர வகுப்பிற்கு தகுதி பெற்றோர் | 11 | 10 | 10 |
| உயர்தர வகுப்பிற்கு தகுதி பெற்றோர் வீதம் | 41% | 38% | 56% |

## இணைக் கலைத்திட்ட செயற்பாடுகள்

**விளையாட்டுத்துறை**

எமது வித்தியாலயத்தின் மாணவர்களின் உடல் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தி ஆற்றல்களை வளர்த்தெடுக்கும் நோக்குடன் தினமும் காலை உடற்பயிற்சி சிறந்த முறையில் வழங்கப்படுவதுடன் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

**மாணவர் மன்றங்கள்**

மாணவர்களின் உள்ளாந்த திறன்களை வளர்க்கும் நோக்குடன் அவர்களின் ஆளுமைப்பண்புகள் மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கும் பல்வேறு பாடங்களுக்குரிய மன்றங்கள் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. ஆரம்பப்பிரிவு மன்றம், இடைநிலைப்பிரிவு மன்றம் என இரு மன்றங்கள் மாதம் ஒரு தடவை செயற்படுகின்றன. மேலும்,இந்துமாமன்றம், கணித விஞ்ஞான மன்றம், சமூக விஞ்ஞான மன்றம், அழகியல் மன்றம், ஆங்கில மன்றம், கிறிஸ்தவ மன்றம் என்பன செயற்படுகின்றன.இந்து மாமன்றம் வெள்ளிக்கிழமை காலை ஆராதனையுடன் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நற்சிந்தனைகளையும் ஒழுங்குபடுத்தி நடாத்தி வருவதுடன் இத்தினங்களில் வாரத்திற்கு ஒரு வகுப்பு என்ற ரீதியில் மாணவர்களை அருகில் உள்ள வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்திற்கு அழைத்துச் சென்று இறைவழிபாடுகளையும் ஆற்றி வருகின்றது.

மேலும் மாணவர் மத்தியில் தோரணம் பின்னல், மாலை கட்டுதல் , கோலம் போடுதல், சமய அறிவுப்போட்டி என்பவற்றையும் நடாத்தி வருவதுடன் இவ்வாறான போட்டிகளில்வலயமட்டத்தில் மாணவர்கள் பங்குபற்றி வெற்றி பெறவும் வழிவகுத்திருக்கின்றது. இதற்கு வழிப்படுத்திய அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.கிறிஸ்தவ மன்றமானது ஒவ்வொரு வருடமும் ஒளி விழாவை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது. பாடசாலை மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட

மாணவர்கள் வலயமட்டப் போட்டிகளில் பங்குபற்றி சான்றிதழ் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை நூலகம்

கல்வி அமைச்சின் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் தரம் 3 நூலகமாக தரம் பிரிக்கப்பட்ட எமது பாடசாலை நூலகம் 60'X20' கட்டடத்தில் இயங்கி வருகின்றது. சிறந்த கற்றல் வள நிலையமாக செயற்பட்டு வரும் இந்நூலகம் மாணவர்களின் கற்றலுக்குத் தேவையான பல துணை நூல்களையும், அறிவியல் துறை சார்ந்த பல நூல்களையும் கொண்டு இயங்கி வருகின்றது. நூலக ஆசிரியர் இல்லாத நிலையில் வேறு பாடத்துறை சார்ந்த ஆசிரியர் ஒருவரினால் இந்நூலகம் சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்டு புத்தகங்களுக்கு இலக்கமிடப்பட்டு பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மாணவர் அமைப்புக்கள்

மாணவர்களை மனித நேயம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு உடையவர்களாக உருவாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து எமது வித்தியாலயத்தில் சிறுவர் பாதுகாப்புக்குழு, இளைஞர் கழக சம்மேளனம், மாணவர் முதல்வர் சபை போன்ற பல மாணவர் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு துடிப்புடன் இயங்கி வருகின்றன.

## சஞ்சிகை வெளியீடும் கண்காட்சியும்

மாணவர்களின் ஆக்கத்திறனை வளர்க்கும் நோக்குடன் கடந்த ஆண்டு ஆரம்பப்பிரிவு,இடைநிலைப்பிரிவு மாணவர்களின் வகுப்பு ரீதியான சஞ்சிகைகள் தயாரிக்கப்பட்டு வெளியீடு செய்யப்பட்டது.அத்துடன் மாணவர்களால் சுயமாகவும் கையெழுத்துச் சஞ்சிகைகள் தயாரிக்கப்பட்டு வெளியீடு செய்யப்பட்டன.கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு மேலும் வலுவூட்டும் வகையில் வகுப்பு ரீதியாகவும் பாடரீதியாகவும் கற்றல் உபகரணங்கள் தயாரிக்கப்பட்டு அவை காட்சிப்படுத்தப்பட்டன.

## பாண்ட் வாத்தியக்குழு

மேற்படி எமது பாடசாலையில் பாண்ட் வாத்திய அணியினர் பாடசாலையின் அனைத்து நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு சிறப்பாக செயற்பட்டு வருகிறார்கள். அத்துடன் அயற்சமூகத்தில் இடம்பெறும் நிகழ்வுகளிலும் எமது பாடசாலை பாண்ட் வாத்திய அணியினர் பங்கு கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. இவர்களை வழிநடாத்திச் செல்லும் ஆசிரிய ஆளணியினருக்கு எனது பாராட்டுக்கள்.

**ஆசிரிய சகோதரத்துவம்**

பாடசாலை ஆசிரியர்கள் ஒரு குடும்பமாக பணியாற்றுவதில் எமது ஆசிரிய சகோதரத்துவத்தின் பங்கு அளப்பரியது. ஆசிரியர்களின் நலன்களைக் கவனிப்பதுடன் அவர்களுக்கிடையே சுமூகமான உறவை ஏற்படுத்தியும் சேவை நலன்களைப் பாராட்டியும் சுகதுக்க நிகழ்வுகளில் பங்குபற்றியும் வருவதுடன் பாடசாலைத் தேவைகளை நிறைவு செய்வதிலும் ஆசிரிய சகோதரத்துவம் அருஞ்சேவை ஆற்றி வருகின்றது.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

எமது பாடசாலையின் அபிவிருத்திச் சங்கமானது துடிப்புடன் செயற்பட்டு வருகின்றது. பாடசாலையின் அபிவிருத்தி வேலைகளுக்கு பக்க பலமாகச் செயற்பட்டு வரும் இவ் அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினருக்கு இந்நன்னாளில் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பழைய மாணவர் சங்கம்**

பாடசாலையின் அபிவிருத்திப் பாதையில் பழைய மாணவர் சங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. பாடசாலையின் அபிவிருத்தித் திட்டங்களில் சரீர உதவிகளையும், நிதி உதவிகளையும் வேண்டிய சந்தர்ப்பங்களில் செய்து வருகின்றமை பாராட்டுக்குரியதாகும். ஒவ்வொரு நிகழ்வுகளிலும் தோளோடு தோள் கொடுத்து உதவி வரும் பழைய மாணவர்கள்அனைவருக்கும்இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாணவ முதல்வர் சபை**

மாணவர்களின் ஒழுங்கு கட்டுப்பாடுகளைப் பேணுவதிலும் பாடசாலை நிகழ்வுகளின்போது ஆசிரியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதிலும் மாணவ முதல்வர் சபை சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. இவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

**மாணவர் பாராளுமன்றம்**

எமது பாடசாலையின் மாணவர் பாராளுமன்றம் 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக செயற்பட்டு வருகிறது. ஒவ்வொரு அமைச்சும் பாடசாலையின் அபிவிருத்திக்கு பல்வேறு செயற்பாடுகளைச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.எமது பாடசாலை, வலயமட்ட பாராளுமன்றத்திலும் அங்கத்துவம் வகிப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர்களை வழிநடாத்திச் செல்லும் ஆசிரிய ஆளணியினருக்கு எனது பாராட்டுக்கள்.

**பாடசாலை பெற்றோர் உறவு**

மாணவர்களின் கல்வி அடைவை மேம்படுத்தும் நோக்கில் வகுப்பு ரீதியாக பெற்றோர் சந்திப்புக்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. இதன்மூலம் மாணவர்களின் குறைநிறைகள் இனங்காணப்பட்டுதீர்ப்பதன் மூலம் பாடசாலைக்கும் பெற்றோருக்கும் இடையிலான உறவும் வலுப்பட்டு வருவதுடன் பாடசாலை நிகழ்வுகளிலும் பெற்றோர்கள் கலந்து கொண்டு பாடசாலைக்குத் தேவையான உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கி வருகின்றனர்.

**பாடசாலை அபிவிருத்திக் குழு**

பாடசாலைகள் தம்மைத் தாமே முகாமை செய்து தமது தேவைகள், பிரச்சினைகளை இனங்கண்டு அதனூடாகப் பாடசாலைச் செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பாடசாலை அபிவிருத்திக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. இக்குழுவானது சிறப்பாக இயங்கி வருவதோடு பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக செயற்பட்டு பல வேலைத்திட்டங்களைத் தயாரித்து வழங்கி வருகின்றது. இக்குழுவினருக்கும் எனது உளங்கனிந்த நன்றிகளும் பாராட்டுக்களும்.

## தேவைகள்

### வகுப்பறைப் பற்றாக்குறை

எமது பாடசாலையில் மூடிய வகுப்பறைகள் பற்றாக்குறையாக இருப்பது பெரும் குறைபாடு ஆகும். ஒரு மண்டபத்திலேயே தரம்-6 முதல் தரம்-11 வரையான வகுப்புக்களை நடாத்த வேண்டியிருக்கின்றது. அத்துடன் தொகுதிப்பாடங்களை நடாத்த வகுப்பறைகள் இல்லாது இருக்கின்ற நிலைமையும் காணப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்ய 100'X20'விஸ்தீரணமான 10 வகுப்பறைகளைக் கொண்ட இரண்டு மாடி கட்டிடம் அமைக்க வேண்டியது அவசியமாகும். மற்றும் பிரதான மண்டபத்தின் பெரும் பகுதி நிலம் செப்பனிடப்பட வேண்டியுள்ளது. மேலும் உடைந்து விழும் நிலையிலுள்ள 40அடி நீளமான மதில் அவசரமாக புனரமைக்கப்பட வேண்டியுள்ளது.

### பாடசாலைக்கு கிடைத்த வெற்றிகள்

பிராந்திய சுகாதார திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட டெங்கு ஒழிப்பு தொடர்பான போட்டியில் வலயமட்டத்தில் 1ம் இடம்பெற்று 5000/= பணப்பரிசு கிடைக்கப் பெற்றது.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கான தோட்டப் போட்டியில் 4ம் இடம் கிடைக்கப் பெற்றது.

தென்மராட்சிக் கல்வி வலய வகை 2 பாடசாலைகளுக்கிடையிலான கற்றல் வள நிலையப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தென்மராட்சிக் கல்வி வலய மாணவர் பாராளுமன்றத்தில் எமது பாடசாலை சார்பில் செல்வி செ.ஜனனி பண்பாடு சமய அலுவல்கள் மற்றும் விழுமிய மேம்பாட்டு அமைச்சராக செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## பாடசாலையின் பௌதீக வள மற்றும் கல்வி அபிவிருத்திக்கு உதவிய உள்ளங்கள்

பாடசாலை பழைய மாணவர்களின் பங்களிப்புடன் திரு சு.வரதராசா தலைமையின் கீழ் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டு 24.05.2016ஆம் திகதியன்று திறப்பு விழா செய்யப்பட்டது.

பல்லூடக அறைக்கான பிளாஸ்டிக் கதிரைகளை திரு மார்க்கண்டு வரதராஜா அவர்களும் திரு க. சிவபாலசூரியர் அவர்களும் வழங்கியிருந்தனர்.

15.11.2016இல் நடாத்தப்பட்ட முதலாவது பாராளுமன்ற அமர்விற்கு லண்டன் வாழ் பழைய மாணவர்கள் திரு அ.செல்வராசா, திரு ச.ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்விற்கான செங்கோலை விவா மின்பொருள் வாணிப உரிமையாளர் திரு க.சசிக்குமார் அவர்கள் அன்பளிப்புச் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எமது பாடசாலையில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியைகள் திருமதி க.திருச்செல்வராசா, திருமதி செ.தனபாலசிங்கம் ஆகியோர் அலுவலகம், கணினி அறை என்பவற்றிற்கான நில விரிப்புக்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

திருமதி ந.சிவராம்(ஓய்வு பெற்ற நடன ஆசிரியை) அவர்கள் விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கான 15 பிளாஸ்டிக் கதிரைகளையும் திரு த.வேலாயுதம் அவர்கள் 15 பிளாஸ்டிக் கதிரைகளையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

திரு க.விசுவலிங்கம் அவர்கள் கணினி அறைக்கான மின்விசிறியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

## பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகள்

PSDG நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலையின் குடிநீர் மற்றும் வசதிகளை மேம்படுத்துவது தொடர்பான வேலைத்திட்டத்தில் 4 இலட்சம் ரூபா செலவில் பெண்களுக்கான மலசலகூடம் புனரமைப்புச் செய்யப்பட்டது.

பாடசாலை பழைய மாணவர்களின் பங்களிப்புடன் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டு 24.05.2016ஆம் திகதியன்று திறப்பு விழா செய்யப்பட்டது. REPAIR OF CLASS ROOM BUILDING என்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கமைவாக 5 இலட்சம் ரூபா செலவில் பிரதான மண்டபத்தின் ஒரு பகுதி நிலமும் ஒரு பகுதி கூரையும் திருத்தம் செய்யப்பட்டதுடன் நடன அறை, சங்கீத அறையும் நிலம் செப்பனிடப்பட்டது.

"அண்மையிலுள்ள பாடசா லை சிறந்த பாடசாலை"(NSBS) என்ற செயற்றிட்டத்தின் கீழ் 08 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புதிய நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் விஸ்தரிக்கப்பட்டது.

## நன்றியுரை

எமது அன்பான அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்து எமக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் கல்விப்பணிப்பாளர் உயர்திரு சுப்பிரமணியம் சுந்தரசிவம் அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வடமாகாணசபை உறுப்பினர் கௌரவ திரு இரத்தினசிங்கம் ஜெயசேகரன் அவர்களுக்கும் உயர்திரு வீரகத்தி கருணலிங்கம் அவர்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றிகள்.

இன்றைய நிகழ்வினைச் சிறப்பிப்பதற்காக வருகை தந்திருக்கும் தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் , கோட்டக்கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள், கோட்டக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள்,அயற்பாடசாலைஅதிபர்கள், அயற்பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பரிசில் நாள் நிகழ்வினை நடாத்துவதற்கு நிதியுதவியினை வழங்கி உதவிய பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக இன்றைய நிகழ்விற்கான பரிசில் நாள் அறிக்கைப் புத்தகத்தினை அன்பளிப்பாக அச்சிட்டு வழங்கிய அஷ்டலக்ஷ்மி பதிப்பகத்தாருக்கு எமது நன்றிகள்.

இப்பரிசில் நாள் சிறப்புற நடைபெறுவதற்கு என்னுடன் முழுமனதுடன் ஒத்துழைத்து அர்ப்பணிப்புடன் உழைத்த உப அதிபர், ஆசிரியர்கள், மாணவ தலைவர்கள், மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அனைவரும் எனது நன்றிக்குரியவர்கள்.

நிறைவாக எமது அன்பான அழைப்பை ஏற்று இன்றைய பரிசில் நாளினை சிறப்பிக்க வருகை தந்த அனைத்து உள்ளங்களுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியினைத் தெரிவித்து எனது பரிசில் நாள் அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.
நன்றி!

திரு நா.கருணாகரன்
(அதிபர்)
யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்.
கைதடி

*உன்னை நீ உயர்த்திக் கொள்ள வேண்டுமெனில்*
*சான்றோருடன் பழகு. அவர்களின் வழி நட.*
*நீதி தவறாமல் ஒழுக்கத்தை பின்பற்று.*
*உறுதியாக நீயே*
*உயர்ந்து விட முடியும்.*

*-பஞ்ச தந்திரம்-*

# OUR SCHOOL STAFF DETAILS-2017

| NO | TEACHER'S NAMES | EDU/PROF.QUALIFICATION |
|---|---|---|
| 01 | MR.N.KARUNAKARAN | PRINCIPAL S.L.P.S 2 ,B.A, B.ED, PGDE, PGDEM , DIP IN COUNSELLING, DIP IN MANAGEMENT |
| 02 | MRS.S.KIRUSHNAMOORTHY | VICE PRINCIPAL ,S.L.T.S 1 B.A(HONS), PGDE,M.A |
| 03 | MISS.P.NITSINGAM | S.L.T.S 1 DIP IN MUSIC, PGDE |
| 04 | MRS.M.SIVANANTHAN | S.L.T.S 1 HINDUISM TRD |
| 05 | MR.G.USHANANTHAN | S.L.T.S 2.11 DIP IN TEACH, B.ED |
| 06. | MR.S.JENAT RAVEENTHIRAN | S.L.T.S 3.1 PRIMARY TRD |
| 07. | MRS.K.THARMARAJAH | S.L.T.S 1 SCIENCE TRD, B.ED |
| 08. | MRS.G.SIVASUTHAN | S.L.T.S 2.11 ,DIP IN TEACH,B.ED,M.ED(R) |
| 09. | MRS.V.ESWARAN | S.L.T.S 2.1 DIP IN MUSIC, PGDE |
| 10. | MRS.N.KUHARAJ | S.L.T.S 2.1 ENGLISH TRD |
| 11. | MRS.A.KURUPARAN | S.L.T.S 2.11 B.A(HONS), PGDE |
| 12. | MR.M.SRIBASKARAN | S.L.T.S 1 COMMERCE TRD, HNDA |
| 13. | MRS.T.KAMALARUBAN | S.L.T.S 3.1 DIP IN TEACHING |
| 14. | MRS.L.KANGATHARAN | S.L.T.S. 1 AGRICULTERE TRD |
| 15. | MRS.S.MURALITHARAN | S.L.T.S. 3.1 B.F.A |
| 16. | MR.S.MATHANARUBAN | S.L.T.S. 2.11 PRIMARY TRD |
| 17. | MRS.R.SRITHARAN | S.L.T.S. 3.11 PRIMARY TRD |
| 18. | MRS.S.PIRAGALATHAN | S.L.T.S. 3.11 PHYSICAL EDU TRD |
| 19. | MRS.N.THAVARAJAH | S.L.T.S. 1 HOME SCIENCE TRD |
| 20. | MISS.T.THAMBAIAH | S.L.T.S. 3.1 DIP IN TEACHING |
| 21. | MR.R.SATHTHIYESWARAN | S.L.T.S. 2.11 B.A(HONS), PGDE,M.A , DIP IN COUNSELLING |
| 22. | MRS.S.JEJEEVAN | S.L.T.S. 2.11 DIP IN TEACHING |

**NON ACADEMIC STAFF-2017**

1. MR.T.SASIKUMAR
2. MR.A.STANISLOSH

## தரம்-01 2017-ஊக்குவிப்புப் பரிசு

| | |
|---|---|
| 1. சு.வர்ணன் | 2. த.நவின்சன் |
| 3. பா.நிசாலன் | 4. அ.கவிநிலவன் |
| 5. பி.ரதிஸ் | 6. இ.இமாசன் |
| 7. ற.பர்வேஷ் | 8. வி.வக்சயன் |
| 9. க.தர்மிசன் | 10. வ.தருஷ் |
| 11. வ.தஜான் | 12. த.நஷ்வின் |
| 13.ம.புராதனீ | 14. சு.சப்தகி |
| 15. பி.டேனுஜா | 16. க.கிருசா |
| 17.பி.ஐஸ்வர்யா | 18. த.தருமி |
| 19.கே.கிதுர்சிகா | 20. பா.சாதனா |
| 21.பி.ஆர்த்திக | |

## பரிசில் பெறும் மாணவர் விபரம்
## தரம்-1- 2016

| பெயர் | | பாடங்கள் |
|---|---|---|
| 01 | செ.மதுசன் | சமயம்,தமிழ்,கணிதம்,சுற்றாடல் சித்திரம்,பிரயோக ஆங்கிலம்,அழகியல், வரவொழுங்கு |
| 02 | த.சண்முகேஸ் | சமயம்,தமிழ்,கணிதம்,சுற்றாடல், சித்திரம், அழகியல், பிரயோக ஆங்கிலம் |
| 03 | கி.கனிஸ்ரா | சமயம்,தமிழ்,கணிதம்,சுற்றாடல் சித்திரம்,பிரயோக ஆங்கிலம் அழகியல் |
| 04 | பி.பிரசாளினி | சமயம்,தமிழ்,கணிதம்,சுற்றாடல் அழகியல், சித்திரம், பிரயோக ஆங்கிலம் |
| 05 | க.நதுசாயினி | சமயம்,தமிழ்,கணிதம்,சுற்றாடல் , அழகியல், பிரயோக ஆங்கிலம் |
| 06 | கு.சஞ்சிகா | சமயம்,தமிழ்,கணிதம், அழகியல், சுற்றாடல் சித்திரம்,பிரயோக ஆங்கிலம் |
| 07 | நா.கானப்பிரியன் | கணிதம், அழகியல் |
| 08 | உ.அனுஸ்ரன் | சித்திரம் |
| 09 | சி.ருசாளினி | அழகியல் |

# பரிசில் பெறும் மாணவர் விபரம்
## தரம்-2- 2016

| பெயர் | | பாடங்கள் |
|---|---|---|
| 01 | ஸ்.அனுஸ்ரன் | சமயம்,தமிழ், கணிதம், சுற்றாடல் சித்திரம், பிரயோக ஆங்கிலம், அழகியல் |
| 02 | க.மிதுசன் | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் சித்திரம்,பிரயோக ஆங்கிலம், அழகியல் வரவொழுங்கு |
| 03 | நா.மேரிசிவானி | சமயம், தமிழ், கணிதம், அழகியல் சுற்றாடல் பிரயோக ஆங்கிலம் |
| 04 | ஸ்ரீ.அசானி | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் அழகியல் சித்திரம்,பிரயோக ஆங்கிலம் |
| 05 | சு.மகிழினி | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் சித்திரம்,பிரயோக ஆங்கிலம் அழகியல் |
| 06 | வி.விதுனா | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் அழகியல் சித்திரம், பிரயோக ஆங்கிலம் |
| 07 | பு.விபூசிதா | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் சித்திரம், பிரயோக ஆங்கிலம் அழகியல் |
| 08 | பு.விபூசினி | சமயம், தமிழ், கணிதம், பிரயோக ஆங்கிலம், அழகியல் |
| 09 | க.தட்சாயினி | சமயம், தமிழ், கணிதம், அழகியல் |
| 10 | சு.கபினன் | சமயம், தமிழ், கணிதம், அழகியல் |
| 11 | ம.கவினஞன் | கணிதம், சித்திரம் |
| 12 | சு.திரிசாள் | தமிழ் |
| 13 | பி.அபிராம் | சமயம் |
| 14 | உ.சமீரா | தமிழ் |

# பரிசில் பெறும் மாணவர் விபரம்
## தரம்-3- 2016

| | பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 01 | செ.கோவர்த்தன் | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் சார் செயற்பாடு, சித்திரம், ஆங்கிலம், அழகியல், பொதுத்தேர்ச்சி, வரவொழுங்கு |
| 02 | பா.நர்த்தனன் | சமயம், தமிழ், சுற்றாடல் சார் செயற்பாடு, அழகியல், பொதுத்தேர்ச்சி |
| 03 | ஸ்.அன்பினியன் | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் சார் செயற்பாடு, சித்திரம், ஆங்கிலம், அழகியல், பொதுத்தேர்ச்சி |
| 04 | வ.தனிஷா | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் சார் செயற்பாடு, சித்திரம், ஆங்கிலம், அழகியல், பொதுத்தேர்ச்சி |
| 05 | ல.துஸ்மிதா | சமயம், தமிழ், சுற்றாடல் சார் செயற்பாடு, சித்திரம், ஆங்கிலம், அழகியல், பொதுத்தேர்ச்சி |
| 06 | ஜெ.தெனஸ்ருஜா | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் சார் செயற்பாடு, சித்திரம், ஆங்கிலம், அழகியல், பொதுத்தேர்ச்சி |
| 07 | து.ஷயந்திகா | சமயம், தமிழ், சுற்றாடல் சார் செயற்பாடு, சித்திரம், ஆங்கிலம், அழகியல், பொதுத்தேர்ச்சி |
| 08 | சி.நிலக்சனா | சமயம், தமிழ், சுற்றாடல், அழகியல் |
| 09 | ந.நதுசனா | சித்திரம், அழகியல் |
| 10 | அ.யூட்ஜக்சன் | அழகியல் |

## பரிசில் பெறும் மாணவர் விபரம்
## தரம்-4- 2016

| பெயர் | | பாடங்கள் |
|---|---|---|
| 01 | சு.மகிழ்நிலா | தமிழ் , கணிதம் , அழகியல், சித்திரம், சமயம் ஆங்கிலம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி, |
| 02 | செ.பானுஜா | தமிழ், கணிதம், அழகியல், சித்திரம், சமயம் , ஆங்கிலம்,சுற்றாடல், பொதுத்தேர்ச்சி, |
| 03 | த.சரணிகா | தமிழ், கணிதம, அழகியல், சித்திரம் ,சமயம் , ஆங்கிலம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 04 | ற.ரெனிசியா | தமிழ், சமயம், அழகியல், சித்திரம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 05 | ந.மதுசன் | தமிழ், கணிதம், அழகியல், சித்திரம், சமயம் , ஆங்கிலம் |
| 06 | நா.விதுசன் | தமிழ், சமயம், கணிதம், அழகியல், |
| 07 | க.கனுஸ்ரனா | தமிழ, சமயம், அழகியல் இசித்திரம்,வரவு ஒழுங்கு |
| 08 | க.பிர்த்தியா | சமயம், அழகியல, சித்திரம் |
| 09 | மு.கஜேனா | சமயம் ,அழகியல, சித்திரம் |
| 10 | யோ.அஸ்வின் | அழகியல், சித்திரம் |
| 11 | சு.பிரியங்கன் | அழகியல், சித்திரம், |

# பரிசில் பெறும் மாணவர் விபரம்
## தரம்-5- 2016

| | பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 01 | தி.அனுஜன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சித்திரம்,அழகியல்,ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 02 | கி.அபிநயா | தமிழ்,சமயம்,சுற்றாடல்,சித்திரம்,அழகியல்,ஆங்கிலம் பொதுத்தேர்ச்சி |
| 03 | ஸ்ரீ.ஜஸ்வந்தினி | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், சித்திரம், அழகியல். ஆங்கிலம் பொதுத்தேர்ச்சி |
| 04 | யே.பேபிசாளினி | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், சித்திரம், அழகியல். ஆங்கிலம் பொதுத்தேர்ச்சி |
| 05 | தெ.சுஜாங்கி | தமிழ், சமயம், சித்திரம், அழகியல், ஆங்கிலம் பொதுத்தேர்ச்சி |
| 06 | ர.தனுசிகா | தமிழ், கணிதம், சித்திரம், அழகியல், ஆங்கிலம் பொதுத்தேர்ச்சி |
| 07 | க.அனுசன் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், சித்திரம், அழகியல், ஆங்கிலம் |
| 08 | சு.சிதுஜா | தமிழ்,கணிதம்,சித்திரம்,அழகியல்,ஆங்கிலம் |
| 09 | மு.தசான் | தமிழ்,கணிதம்,சித்திரம்,அழகியல்,ஆங்கிலம் |
| 10 | த.சுமேதா | தமிழ்,சுற்றாடல்,சித்திரம்,அழகியல் |
| 11 | இ.கஜன் | சித்திரம்,அழகியல்,ஆங்கிலம் |
| 12 | இ.மதுமிதா | சித்திரம்,அழகியல்,ஆங்கிலம் |
| 13 | பு.றேணுகா | சித்திரம்,அழகியல்,ஆங்கிலம் |
| 14 | சு.யஸ்மினி | சித்திரம்,அழகியல் |
| 15 | ச.யஸ்மினா | சித்திரம்,அழகியல் |
| 16 | கி.சாருசன் | சித்திரம்,அழகியல் |
| 17 | தி.தயான் | சித்திரம்,அழகியல் |
| 18 | வ.தவிசன் | அழகியல்,வரவொழுங்கு |
| 19 | கு.சிவசுதன் | அழகியல் |
| 20 | கா.வைஸ்ணவன் | அழகியல் |
| 21 | ஜெ.ஜனதாம்பிகை | சித்திரம் |

# பரிசில் பெறும் மாணவர் விபரம்
## தரம்-6- 2016

| பெயர் | | பாடங்கள் |
|---|---|---|
| 01 | சு.செந்தூரன் | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம் விஞ்ஞானம், வரலாறு, குடியியல்P.T.S, புவியியல்,சுகாதாரம்,சித்திரம் பொதுத்தேர்ச்சி, வரவொழுங்கு |
| 02 | பி.மணிவண்ணன் | சமயம், தமிழ் ஆங்கிலம் கணிதம் விஞ்ஞானம் வரலாறு குடியியல் P.T.S புவியியல் சங்கீதம் பொதுத்தேர்ச்சி |
| 03 | மு.விதுசன் | சமயம், கணிதம் விஞ்ஞானம் வரலாறு குடியியல் P.T.S புவியியல் பொதுத்தேர்ச்சி |
| 04 | சு.பிருத்திகா | சமயம், தமிழ் ஆங்கிலம் கணிதம் விஞ்ஞானம் குடியியல் புவியியல், நடனம் பொதுத்தேர்ச்சி |
| 05 | வா.சாருஜா | சமயம், தமிழ் ஆங்கிலம் கணிதம் விஞ்ஞானம் வரலாறு குடியியல்P.T.Sபுவியியல் நடனம் பொதுத்தேர்ச்சி |
| 06 | கே.கஸ்தூரி | சமயம், தமிழ் ஆங்கிலம் கணிதம் விஞ்ஞானம் வரலாறு குடியியல் P.T.Sபுவியியல் சுகாதாரம் நடனம் பொதுத்தேர்ச்சி |
| 07 | கா.மதுசா | சமயம், தமிழ் ஆங்கிலம் கணிதம் விஞ்ஞானம் வரலாறு குடியியல் P.T.Sபுவியியல் சுகாதாரம் நடனம் பொதுத்தேர்ச்சி |
| 08 | ம.டனோயா | ஆங்கிலம் கணிதம் குடியியல் சங்கீதம் |
| 09 | த.பவிதாஸ் | கணிதம் விஞ்ஞானம், சங்கீதம் |
| 10 | பூ.பவித்திரன் | கணிதம் விஞ்ஞானம் குடியியல் புவியியல் |
| 11 | க.வருண் | கணிதம் விஞ்ஞானம் குடியியல் சங்கீதம் |
| 12 | ந.விதுசன் | கணிதம், விஞ்ஞானம், சங்கீதம் |
| 13 | ஸ்ரீ.டினேஸ் | கணிதம், விஞ்ஞானம் |
| 14 | மு.கஜேந்திரன் | சங்கீதம் |

## பரிசில் பெறும் மாணவர் விபரம்
## தரம்-7- 2016

| | பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 01 | சோ.ஜெபிசன் | சமயம், தமிழு, ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், குடியுரிமைக் கல்வி, செயன்முறைத் தொழிநுட்பம், சங்கீதம்,சுகாதாரம்,பொதுத்தேர்ச்சி |
| 02 | செ.திலக்சி | சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், வரலாறு, குடியுரிமைக் கல்வி, புவியியல், செயன்முறைத் தொழிநுட்பம், சங்கீதம், சுகாதாரம், வரவொழுங்கு, பொதுத்தேர்ச்சி |
| 03 | கி.கம்சிகன் | தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் குடியுரிமைக் கல்வி, செயன்முறைத் தொழிநுட்பம், சங்கீதம், சுகாதாரம்,பொதுத்தேர்ச்சி |
| 04 | ச.கயல்விழி | சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், குடியுரிமைக் கல்வி, செயன்முறைத் தொழிநுட்பம், நடனம், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 05 | செ.அஜந்தா | சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், வரலாறு, குடியுரிமைக் கல்வி, புவியியல்,செயன்முறைத் தொழிநுட்பம், சங்கீதம், சுகாதாரம், வரவொழுங்கு, பொதுத்தேர்ச்சி |
| 06 | பா.தாமினி | சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், வரலாறு, புவியியல குடியுரிமைக் கல்வி, செயன்முறைத் தொழிநுட்பம், சங்கீதம், சுகாதாரம்,பொதுத்தேர்ச்சி |
| 07 | செ.கோபினா | சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், குடியுரிமைக் கல்வி, செயன்முறைத் தொழிநுட்பம், சங்கீதம், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 08 | ஸ்.அஜீனா | சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், குடியுரிமைக் கல்வி, சங்கீதம், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 09 | த.யனார்த்தனன் | விஞ்ஞானம், குடியுரிமைக் கல்வி |
| 10. | சஜீபன் | விஞ்ஞானம், குடியுரிமைக் கல்வி |
| 11 | ஜெ.சார்மி | தமிழ், விஞ்ஞானம், குடியுரிமைக் கல்வி |
| 12 | சி.சம்சியா | தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் |
| 13 | கி.டிசாந் | கணிதம் |
| 14 | ச.லவேந்திரன் | ஆங்கிலம் |

## பரிசில் பெறும் மாணவர் விபரம்
## தரம்-8- 2016

| | பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 01 | வே.குணதீபன் | சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், வரலாறு, புவியியல் குடியுரிமைக் கல்வி, செயன்முறைத்தொழிநுட்பம், சங்கீதம், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 02 | ப.தர்மிலன் | சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், வரலாறு, புவியியல் குடியுரிமைக் கல்வி, செயன்முறைத்தொழிநுட்பம், சங்கீதம், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 03 | ர.தருண் | தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், வரலாறு, புவியியல் குடியுரிமைக் கல்வி, செயன்முறைத்தொழிநுட்பம், சங்கீதம், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 04 | பூ.மதுசாலினி | சமயம், தமிழ், ஆங்கிலம் ,கணிதம், விஞ்ஞானம், குடியுரிமைக் கல்வி, செயன்முறைத் தொழிநுட்பம், சுகாதாரம், வரலாறு, சங்கீதம் |
| 05 | யோ.சம்சிகா | ஆங்கிலம், விஞ்ஞானம், குடியுரிமைக் கல்வி, செயன்முறைத் தொழிநுட்பம், நடனம், வரவொழுங்கு |
| 06 | பா.பாமினி | சமயம், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சங்கீதம் வரவொழுங்கு |
| 07 | ந.தர்சிகா | நடனம் |

## பரிசில் பெறும் மாணவர் விபரம்
## தரம்-9- 2016

| | பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 01 | பா.ஜசினேக்கா | சமயம், தமிழ், விஞ்ஞானம், நடனம், ஆங்கிலம், வரலாறு, குடியியல், புவியியல், சுகாதாரம், வரவொழுங்கு |
| 02 | பா.நிலாணி | தமிழ், ஆங்கிலம், குடியியல் |
| 03 | சி.ஜெனனி | கணிதம், ஆங்கிலம்,குடியியல் |
| 04. | ச.ஜெனித்தா | சங்கீதம் |

## பரிசில் பெறும் மாணவர் விபரம்
## தரம்-10- 2016

| பெயர் | | பாடங்கள் |
|---|---|---|
| 1 | அ.லகுலன் | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, வணிகக்கல்வி, சங்கீதம், பொதுத்தேர்ச்சி |
| 2 | தி.அபித்திரா | சமயம், கணிதம் விஞ்ஞானம், நடனம் |
| 3 | சோ.லக்ஜனா | சமயம், ஆங்கிலம், குடியியல், நடனம், வரவொழுங்கு |
| 4 | சி.விதுர்சன் | சமயம், ஆங்கிலம் கணிதம் |
| 5 | க.கயனா | ஆங்கிலம், சங்கீதம் |
| 6 | க.ஜெபஸ்ரிகா | நடனம் |
| 7 | த.அம்சிகா | நடனம் |

## பரிசில் பெறும் மாணவர் விபரம்
## தரம்-11- 2016

| பெயர் | | பாடங்கள் |
|---|---|---|
| 01 | வி.தர்சிகன் | தமிழ், சமயம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, வணிகக்கல்வி, ஆங்கிலம், விவசாயம் |
| 02 | க.தனுஸா | சமயம், கணிதம், வரலாறு, ஆங்கிலம், சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 03 | செ.செந்தூரன் | ஆங்கிலம், வரவொழுங்கு |
| 04 | வி.சுகுமார் | சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 05 | பா.நிலக்சன் | ஆங்கிலம் |
| 06 | ஸ்.ஜனார்த்தனன் | ஆங்கிலம் |

**2016ல் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன்:**

செல்வன் முருகையா தஷான்-154 புள்ளிகள்

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் விபரம்**

| பெயர் | | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | ஸ்ரீ.யஸ்வந்தினி | 149 |
| 02 | க.அனுசன் | 137 |
| 03 | யே.பேபிசாலினி | 137 |
| 04 | கி.அபிநயா | 136 |
| 05 | தி.அனுஜன் | 132 |
| 06 | தெ.சுஜாங்கி | 121 |
| 07 | ர.தனுசிகா | 118 |
| 08 | சி.சிதுஜா | 114 |
| 09 | த.சுமேதா | 113 |

## 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் விபரம்

| | பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | சு.யஸ்மினி | 94 |
| 02 | கா.வைஸ்ணவன் | 92 |
| 03 | இ.மதுமிதா | 92 |
| 04 | இ.கஜன் | 91 |
| 05 | கு.சிவசுதன் | 88 |
| 06 | சு.சாருசன் | 86 |
| 07 | வ.தவிசன் | 75 |
| 08 | இ.மொகமட் ஹஸ்மா றஸ்டாப் | 75 |
| 09 | பு.ரேணுகா | 72 |

## 2016 க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த உயர்தரம் கற்பதற்கு தகுதி

| | மாணவர் பெயர் | பெறுபேறு |
|---|---|---|
| 01 | செல்வன்.வி.தர்சிகன் | 7A,C |
| 02 | செல்வன்.வி.சுகுமார் | 3A,B,3C |
| 03 | செல்வி.க.தனுசா | 2A,2B,4C,S |
| 04 | செல்வன்.மு.யஸ்மிலன் | 2A,3B,3C,S |
| 05 | செல்வி.செ.கயித்தா | 2A,5C,2S |
| 06 | செல்வன்.செ.செந்தூரன் | A,B,4C,2S |
| 07 | செல்வன்.ஸ்.ஜனார்த்தனன் | 3B,3C,3S |
| 08 | செல்வி.ஸ்ரீ.ஜான்சிகா | 4B,C,3S |
| 09 | செல்வி.சி.துசாயினி | 3B,C,4S |
| 10 | செல்வன்.பா.நிலக்சன் | B,4C,3S |

## வலய மட்டச் சாதனைகள்

| | தரம் | மாணவர் பெயர் | போட்டி | நிலை |
|---|---|---|---|---|
| 01 | 4 | வ.தனிஷா | IMACS | தேர்ச்சி |
| 02 | 4 | ஞ.பானுஜா | COPY WRITING | 3ம் இடம் |
| 03 | 4 | ந.விதுசன் | IMACS COMPETENCY | 1ம் இடம் |
| 04 | 5 | கி.அபிநயா | CT ONLINE QUIZ COMPETENCY | 1ம் இடம் |
| 05 | 7 | செ.திலக்சி | விஞ்ஞான வினாடி வினா<br>சமூக விஞ்ஞானம்<br>செய்முறை (விஞ்ஞானம்) | <br>1ம் இடம்<br>3ம் இடம் |
| 06 | 4 | சு.மகிழ்நிலா | பாவோதல் | 3ம் இடம் |
| 07 | 10 | வி.தர்சிகன் | விவசாய அறிவுப் போட்டி | 3ம் இடம் |
| 08 | 11 | ஸ்.ஜனார்த்தனன் | நீளம் பாய்தல் | |
| | | | குண்டு போடுதல் | 1ம் இடம் |
| 09 | 11 | பா.நிலக்சன் | தட்டு எறிதல் | 1ம் இடம் |
| 10. | 9 | அ.லகுலன் | செய்முறை (விஞ்ஞானம்) | 2ம் இடம் |

## 2013/2014ல் பரிசில் நாள் நிதியம் உருவாக்கியோர் விபரம்
## அன்பளிப்பு - லண்டன் வாழ் மக்கள்

1. திரு. சே.ச.சிறிஸ்கந்தராஜா
2. திரு. க.சந்திரகுமார்
3. திரு. அ.செல்வராசா
4. திரு. சி.பேரானந்தராசா
5. திரு. ச.கோணேஸ்வரன்
6. திரு. ச.புஸ்பராசா
7. திரு. ச.சிறீஸ்கந்தராசா
8. திரு. வி.கபில்ராஜ்
9. திரு. க.சிவராசா
10. திரு. வி.சிவசுமித்திரன்
11. திரு. சோ.சதீஸ்குமார்
12. திரு. சி.மகேஸ்வரன்
13. திரு. இ.ரவிவர்மன்
14. திரு. ச.சேனாதிராசா
15. திருமதி. ல.முகுந்தன்
16. திரு. ஆ.பூபாலசிங்கம்

**இவ்நிதியத்தின் வட்டியானது பரிசில் நாள் செலவுக்குப் பயன்படுத்தப்படுகிறது.**

**2017 ம் ஆண்டின் பரிசில் நாளிற்கு உதவி புரிந்தோர்**

1. திரு க.சிவபாலசூரியர்-30,000/=
2. திருமதி வ.விக்கினேஸ்வரன்-10,000/=
3. திரு. க. கஜேந்திரன்-15,000/=
4. திரு.க. செந்தில்நாதன் -5,000/=
5. திரு. நா. சசி (லண்டன்) -5000/=
6. திரு. இரத்தினம் சிவறஞ்சன் (லண்டன்) - 10,000/=
7. திரு. சிவம்தனுசன் 5,000/=
8. திரு. இரத்தினம் ஸ்ரீதரன் (சுவிஸ்) 5,000/=
9. திரு. கணேசன் குகன் அவர்கள் ரூபா.10,000/=

பெறுமதியான புத்தகம் அன்பளிப்பு செய்துள்ளார்.

## ஞாபகார்த்த நிதியப் பரிசில்கள்

1.திரு. ஆறுமுகம் சூரியகுமாரன் ஞாபகார்த்தமாக அவரது மனைவி திருமதி. தயாபரி சூரியகுமாரன் அவர்களால் ரூபா25000/= நிதியத்தை உருவாக்கி வருடாந்த வட்டியினை வருடாந்த பரிசில் நாளில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தொடர்ந்தும் எமது பாடசாலையில் கல்வி கற்கும் அல்லது அதிக புள்ளி பெற்று தொடர்ந்தும் எமது பாடசாலையில் கல்வி பயிலும் மாணவருக்கு வழங்கப்படுகின்றது. அந்தவகையில், தரம்-6 ஐச் சேர்ந்த செல்வன் முருகையா தசான் அவர்கள் இந்நிதியப் பரிசிலைப் பெற்றுக் கொள்கின்றார்.

2. திருமதி மாசிலாமணி முருகேசு ஞாபகார்த்தமாக அவரது மகள் திருமதி ஜெ.சுப்பிரமணியவேல் அவர்களால் ரூபா10000/= நிதியத்தை உருவாக்கி வருடாந்த வட்டியினை வருடாந்த பரிசில் நாளில் க.பொ.த(சா/தர) பரீட்சையில் அதிகூடிய பெறுபேற்றினைப் பெற்ற மாணவருக்கு வழங்கப்படுகின்றது. அந்தவகையில், செல்வன் விஸ்வலிங்கம் தர்சிகன் அவர்கள் இந்நிதியப் பரிசிலைப் பெற்றுக் கொள்கின்றார்.


3. செல்வி யசோதை நடராஜசுந்தரம் அவர்களால் வருடாந்த பரிசில்நாள் நிகழ்விற்கு ரூபா24000/= நிதியத்தை உருவாக்கி வருடாந்த வட்டியினை வருடாந்த பரிசில் நாளில் க.பொ.த(சா/தர) பரீட்சையில் ஆங்கிலம் உட்பட அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெற்ற மாணவருக்கு வழங்கப்படுகின்றது. அந்தவகையில், செல்வன் முருகையா யஸ்மிலன் அவர்கள் இந்நிதியப் பரிசிலைப் பெற்றுக் கொள்கின்றார்.

ஆகிய நிதியங்கள் எமது பாடசாலையில் நடைமுறையில் உள்ளன. எதிர்காலத்தில் பரிசில்நாள் நிகழ்வினை சிறப்பாக நடாத்துவதற்கு இவ்வாறான புலமைப்பரிசில் நிதியத்தினை எதிர்பார்ப்பதோடு, இவ்வருடம் இந்நிதியத்தின் வட்டியுடன் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், ஆசிரியர்கள் ஆகியோரின் நிதிப்பங்களிப்புடன் இப்பரிசில் நாள் சிறப்பாக நடைபெறுகின்றது.

# நன்றி!














தினக்கலண்டர்,
பஞ்சாங்க கலண்டர்,
பாலர் தமிழ் அரிச்சுவடிகள்,
ஆங்கில அரிச்சுவடிகள்,
சிறிய தோத்திர நூல்கள்
வெளியடுவோரும்
விற்பனையாளரும்.



**அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்**

41, கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
322, செட்டியார் தெரு, கொழும்பு-11

+94 11 2334004
+94 21 2231769

australuxme@yahoo.com